

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in — நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி — murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 159 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 06 – சனிக்கிழமை 20 ஜனவரி 2024 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 159: Thiruvalluvar Year - 2055 - Thai 06 - Saturday 20 January 2024 - Trichy ★★ 16 Pages ₹ 5.00


### தமிழ்நாட்டின் புகழ் மகுடத்தில் மற்றும் ஒரு மாணிக்க முத்திரை! கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள்- 2023

# பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்!

## ஆளுநர் ஆர்.என்.ரவி - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலை வகித்தனர்!

**சென்னை, ஜன. 20 -**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் - 2023-ஐ, சென்னையில் நடத்திட முடிவு மேற்கொண்டதைத் தொடர்ந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசின் உயர் அலுவலர்கள், விளையாட்டு மேம்பாட்டு ஆணைய அதிகாரிகள் அனைவருடனும் இணைந்து இந்தப் போட்டிகளை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக நிறைவேற்றியுள்ளார்கள்.**

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை சென்னைக்கு வருகை தந்து கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளைத் தொடங்கி வைத்துச் சிறப்பிக்குமாறு இளைஞர் நலன் மற்றும்



விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 4-1-2024 அன்று புதுடெல்லி சென்று அழைப்பு விடுத்தார்கள்.

இந்த அழைப்பினை ஏற்றுக் கொண்ட பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் நேற்று (19.1.2024) சென்னைக்கு வருகை தந்து மாலை 6.00 மணிக்கு ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கில், கேலோ



இந்தியா விளையாட்டுப் போட்டிகளை முறைப்படி தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஒன்றிய அரசின் இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுகள், செய்தி மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சர் அனுராக் தாக்கூர், ஒன்றிய அரசின் உள் விவகாரங்கள், இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை இணையமைச்சர் நிசித் பிரமாணிக், தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் பங்கேற்றனர்.

23-1-2024 அன்று தொடங்கி 31-1-2024 வரை நடைபெறும். இந்த விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் மட்டுமல்லாமல் திருச்சி, கோயம்புத்தூர், மதுரை ஆகிய நகரங்களிலும் நடைபெறுகின்றன.

தடகள விளையாட்டுகளான கால்பந்து, கபடி. வாலிபால், ஜூடோ, பளு தூக்குதல், ஸ்குவாஸ், வில் வித்தைகள், குத்துச் சண்டை, பூப் பந்தாட்டம், டேபிள் டென்னிஸ், சைக்கிள், ஜிம்னாஸ்டிக், நீச்சல், ஆக்கி, டென்னிஸ், துப்பாக்கி சுடுதல், யோகா, மல்யுத்தம் முதலிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும்.

கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளில் நம்நாட்டின் 36 மாநிலங்கள் மற்றும் ஒன்றிய நிர்வாகப் பகுதிகளிலிருந்து 18 வயதிற்குட்பட்ட வயதுப்பிரிவில் 5,500க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும், 1,600க்கும் மேற்பட்ட பயிற்சியாளர்களும் பங்கேற்கின்றனர். இந்த விளையாட்டுப் போட்டிகளைச் சிறப்பாக நடத்திட 1,000க்கும் மேற்பட்ட நடுவர்கள், 1,200க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் துணைபுரிவார்கள்.

இந்த கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகள் 2023இல் முதல்முறையாக தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டான சிலம்பம் உட்பட மொத்தம் 27 விளையாட்டுகள் காட்சி விளையாட்டுகளாக (DEMO Sports) இடம் பெறுகின்றன.

இந்த விளையாட்டுப் போட்டிகள் ஒவ்வொன்றும் நடைபெறும் இடம், நாள், நேரம் ஆகியவை குறித்த விவரங்கள் விளையாட்டு ஆர்வலர்களுக்கு வசதியாக இணையம் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இந்திய விளையாட்டு ஆணையம், பல்வேறு தேசிய விளையாட்டுக் கூட்டமைப்புகள் ஆகியவற்றுடன் இணைந்து போட்டிகளுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் திட்டமிட்டுள்ளது.

போட்டிகள் சிறந்த முறையில், நடைபெறுவதற்கான கட்டமைப்பு வசதிகள், விளையாட்டு வீரர்கள் வந்து தங்குவதற்கான இடவசதிகள், உணவு வசதிகள், போட்டி நடைபெறும் இடங்களுக்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் அனைத்தையும் தமிழ்நாடு அரசு மிகச் சிறப்பாகத் திட்டமிட்டு ஏற்பாடுகளைச் செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# 2024 நாடாளுமன்றத் தேர்தலையொட்டி தி.மு.க. தலைமைக் கழக அறிவிப்புகள்!

## 2024 - நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழு

### கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான கழகப் பணிகளை ஒருங்கிணைக்கவும் மேற்பார்வையிடவும் பின்வரும் குழு அமைக்கப்படுகிறது.

**மாண்புமிகு கே.என்.நேரு**
**திரு.ஆர்.எஸ்.பாரதி**
**மாண்புமிகு எ.வ.வேலு**
**மாண்புமிகு தங்கம் தென்னரசு**
**மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின்**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 18-01-2024

**மு.க.ஸ்டாலின்**
தலைவர்,
தி.மு.க.

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திடும் குழு

### பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!

தொகுதி உடன்பாடு குறித்து கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திட
**தி.மு.க. தலைமைக் கழகம் அமைத்துள்ள குழு**

குழு தலைவர் : **திரு.டி.ஆர்.பாலு**
(கழகப் பொருளாளர்)

குழு உறுப்பினர்கள் : **திரு.கே.என்.நேரு**
(கழக முதன்மைச் செயலாளர்)

**திரு.இ.பெரியசாமி**
(கழகத் துணைப் பொதுச்செயலாளர்)

**திரு. க.பொன்முடி**
(கழகத் துணைப் பொதுச்செயலாளர்)

**திரு. ஆ.ராசா,** எம்.பி.,
(கழகத் துணைப் பொதுச்செயலாளர்)

**திரு. திருச்சி சிவா,** எம்.பி.,
(கழக கொள்கைப் பரப்புச் செயலாளர்)

**திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
(கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்)

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 18-01-2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

நாடாளுமன்றத் தேர்தல் - 2024

## நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்க குழு

### பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையினைத் தயாரிக்க அமைக்கப்பட்ட குழுவினர் விவரம்:

**தலைமை:** **திருமிகு. கனிமொழி கருணாநிதி எம்.பி.,**
(கழகத் துணைப் பொதுச் செயலாளர்)

**திரு. டி.கே.எஸ்.இளங்கோவன்**
(தலைமைக் கழகச் செய்தித் தொடர்புத் தலைவர்)

**திரு. ஏ.கே.எஸ்.விஜயன்**
(கழக விவசாய அணிச் செயலாளர்)

**மாண்புமிகு பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன்**
(கழகச் சொத்துப் பாதுகாப்புக் குழுச் செயலாளர்)

**மாண்புமிகு டி.ஆர்.பி.இராஜா**
(கழகத் தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர்)

**மாண்புமிகு கோவி.செழியன்**
(கழக வர்த்தகர் அணி துணைத் தலைவர்)

**திரு. கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் எம்.பி.,**

**திரு. சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ.,**
(கழக மாணவரணிச் செயலாளர்)

**திரு. எம்.எம்.அப்துல்லா எம்.பி.,**
(கழக அயலக அணிச் செயலாளர்)

**மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ.,**
(கழக மருத்துவ அணிச் செயலாளர்)

**மாண்புமிகு மேயர் பிரியா**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 18-01-2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.